செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

[வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 18உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ0] யாழ்ப்பாணம்:- கீலக வரு பங்குனி மீ கஉ வெள்ளிக்கிழமை (14-3-1969) [இல-கக

நேயர் நெஞ்சம்

‘சிவராத்திரி’யின் பெருமையும் சத்தியசாய் பாபாவும்

28-2-69 இந்து சாதன இதழில், சிவராத்திரி - தவராத்திரி என்ற தலைப்பில் ஓர் கடிதம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதனை, நொந்து நொந்து எழுதிய அன்பர் திரு கா. இரகுநாதன் அவர்கட்கு சைவ உலகம் இந்து சாதன ஏட்டின் மூலம் வணக்கம் செலுத்துதல் சாலவும் பொருந்தும். யாழ்ப்பாண நல்லூரில், ஐந்தாம் குரவராம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவதரித்த புண்ணிய பூமியில், சைவமும்-தமிழும் தழைக்கத் தம்மைத் தியாகம் செய்த நல்லூரில் - சிவராத்திரியில் - சிவபெருமானை யல்லாது — (எழுதவே கை நடுங்குகின்றது) - மற்றுமோர் தெய்வத்தை - சிவமாக வைத்து வணங்குவது பொருத்தமில்லை!

மகா சிவராத்திரியின் மகத்துவத்தைப் பற்றி பகவான் ஸ்ரீ சத்யசாய் பாபா அவர்கள் கூறுவதனைக் கேட்டுச்சிந்தியுங்கள். அதன் பின்னுவது சிவ நிந்தனையற்ற "சிவனை" என் திருக்கவும் தக்கன் யாகம் செய்து தலைபோன வரலாற்றினை 'சிவ' நிந்தனை புரியும் "மெய்யன்பர்கள்" சிறிது எண்ணிப் பார்க்க வேண்டும்.

பகவான் எழுதியதை அப்படியே அன்பர்களுடைய கவனத்துக்கு சமர்ப்பிக்கின்றேன்:

"சிவராத்திரியின் பூர்வீக சரித்திரத்துக்கு சாத்திரங்களில் பல கதைகள் உண்டு. சிவராத்திரி தினத்தன்று சிவபெருமான் முனிவர்கள் புடைசூழ, மற்றுங் கணங்கள் சூழ்ந்துவர ஆனந்தத் தாண்டவம் புரிகின்றார். பாற்கடலில் மிதந்து வந்த ஆலகாலவிடமானது எல்லோரையும் அழிக்கும் வேகத்துடன் வந்தது. அதனை ஆண்டவன் தடுத்து எடுத்துண்டார். உலகம் உய்ந்து போம் வண்ணம் அவர்கள் செய்த பிரார்த்தனையின் பலனால், விடத்தைக் கண்டத்தில் அமர்த்தினர். விடத்தின் வேகமும் உஷ்ணமும், இறைவனாலும் தாங்க இயலாததாக இருந்தது. ஆகவே கங்கை நீர் கொண்டு அவர் சடாபாரத்துக்கு இடைவிடாது அபிஷேகம் செய்தார்கள் தேவர்கள். சிவஸ்தலங்களில் சிவராத்திரி வேளைகளில் சிவலிங்கத்துக்கு சில கோவில்களில் இடைவிடாது அபிஷேகம் செய்வதற்கும் இதுதான் காரணமெனக் கூறப்படுகின்றது. இது செய்தும் வெப்பம் தீரவில்லை. ஆகவே தண்ணளி வீசும் வெண்மதியைக் தருவித்துச் சடாமுடியில் அணிந்து கொண்டனர். வெப்பம் சிறிது தணிந்தது. கங்காதேவியையும் கொணர்ந்து முடியில் வைத்தனர். அதனால் ஆண்டவன் ஆறுதல் பற்று ஆனந்தத் தாண்டவம் செய்தருளினார் என்பது கதை. இவை யாவும் ஓரே இரவில் நடந்தன்று. ஆகையினால் சிவராத்திரி தினத்தை அன்றுதான் ஞாபகதினமாகக் கொண்டாட முடியாது. சிலர் அன்றுதான் சிவபெருமான் தோன்றிய தினம் என்கின்றார்கள். மக்களைப் போன்று பிறப்பும் இறப்பும் உடையவர் சிவனென்பது சிலருடைய கருத்து. அது தவறு.

ஒரு வேடன் ஒருவன் விலவமரம் ஒன்றில் ஏறி இரவு முழுவதும் மிருகங்களுக்கஞ்சிக் கண் விழிப்பதற்காக, மரத்தில் உள்ள இலைகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கி கீழே போட்ட வண்ணம் அன்றிரவைக் கழித்த

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவில் மகோற்சவம்

ஷெ கோவிலின் மகோற்சவம் 14-3-69 வெள்ளிக்கிழமை துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகும். விநாயகர் உற்சவம் மூன்று தினங்களுக்கும், சுப்பிரமணியர் உற்சவம் மூன்றுதினங்களுக்கும் 21-3-69 வெள்ளி முதல் ஞாயிறு வரை பக்தோற்சவம் 23-3-69 சந்திரசேகரப்பட்டம் 24-3-69 முதல் பஞ்சமூர்த்திகள் உற்சவம் 31-3-69 ரதோற்சவம், 1-4-69 தீர்த்தோற்சவம் நடைபெற்று அடுத்தநாள் திருக்கல்யாண உற்சவம் இடம்பெறும்.

உ
சிவமயம
திருச்சிற்றம்பலம்
உண்ணாமுலை யுமையாளொடு
முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரள்
மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ண மறுமே.
திருச்சிற்றம்பலம்
—திருஞானசம்பந்த சுவாமிகள்.

நாவலர் நல்வாக்கு

சிவபெருமான் இம் மனித சரீரத்தை எதன் பொருட்டுத் தந்தருளினார்?

தம்மை மனசினாலே சிந்திக்கவும், நாவினாலே துதிக்கவும், தம்மால் அதிட்டிக்கப்படுங் குருலிங்க சங்கமம் என்னும் மூவகைத் திருமேனியையுங் கண்களினாலே தரிசிக்கவும், கைகளினாலே பூசிக்கவுங் கும்பிடவும், தலையினாலே வணங்கவும், கால்களினாலே வலஞ் செய்யவும், தமது பெருமையையுந் தமது திருவடியார் பெருமையையுங் காதுகளினாலே கேட்கவுமே இம் மனித சரீரத்தைத் தந்தருளினார்.

(சைவவினாவிடை 2-ம் புத்தகம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில் திருவிழா

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார்கோயில் வருடாந்த திருவிழா 28-3-69-ல் ஆரம்பமாகின்றது.

பக்திக்கு அடுத்தது சுத்தம்
சுத்தம் சுகம் தரும்.

MILK WHITE
VMK
SOAP
மில்க்வைற்

மில்க்வைற்சோப்
வாங்கிப் பாவித்து
அதிக இலாபமடையுங்கள்

விநாயகர்

[அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்]

(முன்வளர்ச்சி — 2)

திருவடிவத்தத்துவம்

விநாயகக்கடவுள் ஏகதந்தராயிருப்பது பரஞான பதி என்பதை அறிவித்தற்காகும். மூன்று திருக்கண் சூரியன், சந்திரன் அக்கினி என்னும் முச்சுடர்களையும் நிலைக்களமாய் நின்று செலுத்துகின்றவர் தாமென்பதையும் இரு செவிகள் எல்லா அறிவும், எல்லா வல்லமையும் உடையவர் தாமென்பதையும். திருவடிகள் ஞானசத்தி கிரியாசத்திகளையும் குறிப்பனவாம். பெருவயிறு எல்லாவுலகங்களும் உயிர்களும் தம்முள் அடங்கியுள்ளன என்பதையுக் காட்டும் குறிப்பாம்.

கயமுகனைச் சங்காரம் செய்வதற்காக முரித்த ஒரு கொம்பை ஏந்தியது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் நீக்குபவர் தாமென்பதை அறிவித்தற்காகும், ஆன்மாக்களை அநாதியேபந்தித்த ஆணவமலமாகிய யானையைப் பாசத்தாற்கட்டி அங்குசத்தாலடக்கி மறைத்தலென்னும் கிருத்தியத்தை செய்பவர் தாமென்பதை உணர்த்துவதற்காகப் பாசாங்குசங்களை ஏந்தினர். கயமுகாசுரனோடு செய்த யுத்தத்திலே பரமகருணாநிதியாகிய கணேசமூர்த்தியானவர் ஆணவரூபமாகிய கயமுகாசுரனுடைய சேனைகளைப் பாசத்தாற்கட்டிக் கணிச்சியாலடக்கி அவன் மலவலி கெட்டுப் பெருச்சாளியாய் வர நீங்காத ஞானத்தைக் கொடுத்துச் சுத்தனுக்கிவாகனமாம் பேற்றை அளித்து அடிமை கொண்டருளினார். இதனால் ஆணவமாகிய யானையை அடக்கி ஆன்மாவை அடிமைகொள்பவரென்பது இனிது விளங்கும். பாசத்தையும் அங்குசத்தையுமேந்தியது, தம்மைக் கட்டுபவரும் செலுத்துபவரும் பிறிதொருவருமில்லை என்பதை உணர்த்தும் அறிகுறியாம். சிவபெருமான் தாம் பஞ்சகிருத்திய பதி என்பதைத், தமது திருமுகங்கள் ஐந்தினாலும் உணர்த்துவதுபோல, விநாயகரும் துதிக்கை முதலிய ஐந்து திருக்கரங்களாலும் உணர்த்துகின்றனர்.

விநாயகர் முதலில் வழிபடுதற்குரியவர்

வேதம் பிரணவத்தை முதலில் வைத்துத் தொடங்குகின்றது. இதன் வடிவமே விநாயகக்கடவுள் வேதத்தின் முதலெழுத்து விநாயகரின் சொரூபமாதலை அவரது துதிக்கை உணர்த்தும். பிரணவத்தின் வரிவடிவை அறிந்துகொள்ளுதல் வேண்டும். ஆமை ஐந்துறுப்புக்களையும் தன்னகத்து அடக்குவதுபோல, பிரணவமும் நாதம், விந்து, அகரம், உகரம், மகரமாகிய ஐந்துறுப்புக்களையும் தன்னகத்தடக்கியுள்ளது. அவற்றுள் நாதம் தாண்டவ வடிவம், விந்து வட்டவடிவம் இவ்விரு உறுப்புக்களும் சேர்ந்த வடிவம் பிள்ளையார் சுழியென்றும், மூலமனு என்றும், ஊமை எழுத்து என்றும், மௌனாக்ஷரமென்றும் சொல்லப்படும். "உ" என்னுமெழுத்து நாதவிந்துக்களின் வரிவடிவாகும். இது விக்கினேசுரக் கடவுளுடைய துதிக்கை போலாம். துதிக்கை நாதவிந்து வடிவம், ஏனை எழுத்துக்கள் ஈசானருடைய முகத்திலடங்கும். இக்காரணம் பற்றியே எடுத்துக்கொண்ட கருமம் இடையூறின்றி இனிது முடியும் பொருட்டுக் கணபதியை முதலில் வணங்குவதும், எழுதத் தொடங்குமபொழுது பிள்ளையார்சுழி எழுதியே ஆரம்பிப்பதுமாகிய மரபை உலகம் கைக்கொண்டு அனுட்டித்து வருகின்றது.

சைவ சித்தாந்தத்திலே எப்பொழுதும் எவ்விடத்தும் முதலில் விநாயக வணக்கம் வேண்டுமென்னும்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

கீலகஞு பங்குனி மீ ௧-௨ வெள்ளிக்கிழமை [1969]

கலையரசருக்குப் பாராட்டு

ஒரு நாட்டின் நாகரிகத்துக்குச் சிறப்பளிக்கும் அங்கங்களுள் நாடகக்கலையுமொன்றாகும். அரிச்சந்திரன் நாடகம் மக்களுக்குச் சத்தியத்தின் பெருமையை அறிவுறுத்தும். இராம நாடகம், குரு வணக்கம், பதிபக்தி, சகோதரர் கடமை முதலிய நல்லொழுக்கங்களின் நன்மைகளை மக்கள் உள்ளங்களில் பதியச் செய்யும். இவ்விதமாக நல்ல பண்புள்ள நாடகங்கள் மக்களுக்கு நல்ல உபதேசங்களாகும்.

எமது ஈழநாட்டில் நாடகக் கலையைப் பல பெரியார்கள் வளர்த்து வந்தனர். முற்காலத்தில் அதற்கென ஒருசபை நிறுவப்பட்டுத் தொண்டாற்றிவந்தது. முதலியார் இராசநாயகம், வண்ணை, வை. இராமநாதன், இந்துசாதனப் பத்திராதிபர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை போன்றவர்கள் அச்சபை மூலம பல நாடகங்களை அரங்கேற்றினர். அந்தக் கலைஞர் கூட்டத்தைச்சேர்ந்தவர்கள் பலர் மறைந்துவிட்டனராயினும் அக்கூட்டத்தைச் சேர்ந்த ஒருபெரியார் இன்றும் நாடகக்கலைக்குத்தொண்டாற்றி வருவது யாவருக்கும பெருமகிழ்ச்சியைத் தரும். அவரே கலையரசு திரு. க சொர்ணலிங்கம் அவர்கள். அவருடைய 80-வது பிறந்ததினவிழாவும் அவர் எழுதியுள்ள 'ஈழத்தின் நாடகமும் நானும்" என்னும நூலினது வெளியீடும் யாழ் நகரசபை மண்டபத்தில் எதிர்வரும் 17-ம், 18-ம திகதிகளில் நடைபெறும். 1901-ம ஆண்டில் அவர் தமது பன்னிரண்டாவது வயதில் லோகிதாசனாக முதல் முதல் நடித்ததைத் தொடர்ந்து 68 ஆண்டுகள் பல நாடகங்களில் நடித்து ஒப்பற்ற பெருமையை படைத்துள்ளனர். மனோகரா, வேதாள உலகம், வாணிபுர வணிகன், பாதுகா பட்டாபிஷேகம் முதலிய நாடகங்களில் மனோகரன் தத்தன் லக்ஷ்மணன், கூனி, பரதன், மந்தரை முதலிய பாத்திரஙகளாக நடித்து இரசிகர்களுடைய மதிப்பையும் பாராட்டையும் பெற்றவர்.

தமிழ் நாடகத் தலைவராகவுள்ள திரு. சங்கரதாஸ் சுவாமிகளின் ஆசியையும் பெற்றவர். நாடகப் பேராசிரியர் பத்மபூஷணம் சம்பந்த முதலியாரவர்களை ஆசானாக்கொண்டவர்.

பொருள் சம்பாதிப்பதை அவர் குறிக்கோளாகக் கொள்ளாது கலையின் அபிவிருத்தியையே கருதி உழைத்தனர். அதனால் தான் அவருடைய தொண்டு சோபித்தது. அவர் நாடகக் கலையை இறைபணியாகக் கருதி உழைத்தனர். நாடகங்களை அரங்கேற்றும பொழுது ஏற்பட்ட கஷ்டங்களைக் கண்டு அஞ்சமாட்டார் அவருடைய சமயோசிதபுத்தியும இன்சொல்லும் பொறுமையும் அக்கஷ்டங்களை சூரியனைக்கண்டபனி போல் மறையச் செய்தன. இவ்விதமாக அரும்பெரும் தொண்டாற்றி தமிழ் மொழியையும நாடகக்கலையையும் வளர்த்து வந்த பெரியார் அவர்கள் நீண்டகாலம் வாழந்து நாடகக் கலைக்கு பணிபுரிய இறைவன் அருள் புரிவாராக.

விநாயகர்

(1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

நியமமுள்ளது. விநாயகர் இடரைப் போக்குபவரென்பதும், முதலில் வழிபடுதற்குரியவரென்பதும் சமயாசாரியர் சந்தானசாரியர் திருவாக்குக்களாலும் உணர்ந்து கொள்ளத்தக்கன.

நாளிகேர (தேங்காய்) லக்ஷணம்

விநாயகருடைய நிவேதனப் பொருள்கள் எல்லாவற்றிலும் தேங்காய் விசேஷமுள்ளது. தேங்காயைச் சோதித்து எடுத்தல் வேண்டும். அது முடியோடுகூடியதாயும் மேற்பாக முதல் அடித் தேங்காய் வரையும் மூன்று ரேகைகள் உள்ளதாயும் நீர் இல்லாதிருத்தல் முதலிய குற்றங்கள் இல்லாததாயும் இருத்தல் வேண்டும்.

(வளரும்)

கலையரசர்
கலை அரசரே

—கலைமாணிக் கவிராயர்—

கலையரசர் சொர்ணலிங்கம் அவர்களைக் கலாநிதி வித்தியானந்தன் முதலியோர் எழுதிய கட்டுரைகள் மூலமறிந்தவர்கள் பலர். அவர் நடித்த நாடகங்களைப் பாராமலே எழுத்தையும் பேச்சையும் அநுபவித்தவர்களும் உளர்.

அண்மையில் கலையரசர் ஆசிரிய கலாசாலை ஒன்றின் சிறந்தவோர் நாடக நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினுர். அதற்குமுன் கவியரங்கு கவிஞர் சிலர் கவி பொழிந்தனர்.

கவியரங்கு முடிந்ததுதான் தாமதம் கலையரசர் கவிஞர்களைச் சூழ்ந்துவிட்டார். கைலாகு கொடுத்து எதுவித படாடோபமுமின்றிப் பாராட்டினுர். ஆம் கலையரசர் கலையரசரே. நாடகக் கலைக்கு மாத்திரமன்று கவின் கலைகள் யாவற்றிற்கும் தாம் கலையரசர் என்பதை நிரூபித்துவிட்டார்.

வாழ்க கலைகளின் அரசர்.

சிவராத்திரியின் பெருமையும்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

தான் அவ்வாறு அவனால் வீசப்பட்ட வில்வப் பத்திரங்கள் யாவும் மரத்தின் அடியில் அமர்ந்துள்ள சிவலிங்கத்துக்கு அர்ச்சனையாகி விட்டபடியினால் அவனுக்கு மோட்சம் கிடைத்தது. சிவராத்திரியின மகிமையை எடுத்துவிளக்குவதற்கு இக்கதை ஒரு எடுத்துக்காட்டு மாசி மாத மகா சிவராத்திரியின் மட்டுந்தான் சிவராத்திரி நிகழ்வதில்லை. ஒவ்வொரு மாதத்திலும் சிவராத்திரி உண்டு. சிவபெருமானை மனதில் தியானிப்பதற்காக இரவு இந்த இராத்திரியின் விசேடமென்ன?

"பூரண சந்திரன் இரவு காலத்தை ஆளுகின்றான். சந்திரனுக்குப் பதினறு கலைகள் உண்டு. ஒவ்வொரு நாட் கழிய அதனுடைய கலைகளும் படிப்படியாககுறைந்து அமாவாசைத் தினத்தன்று சூனியமாகிவிடும், இதே போன்ற அமாவாசைத் தினத்துக்கு அடுத்தநாள் தொடங்கி பூரணைதினம் வரை கலைகள் வளரும். இந்தப் பூரணை தான் எம்மனத்தகத் தெழுந்தருளியிருக்கும் இறைப்பொருள் (Chauramaa manaso Jaathah) புருஷனின் மனதிலிருந்து இப் பூரணத்துவம் பிறக்கின்றது. மனதுக்கும் பூரண சந்திரனுக்கும் கிட்டியசம்பந்தம் உண்டு. இரண்டுக்கும் பூரண தத்துவமும் பூரணத்துவமின்மையு முண்டு. மனதை அடக்கி, அதனுடைய வேகத்தைக்குறைத்து ஈற்றில் அதனை அழித்தல் வேண்டும். ஒவ்வொரு சாதகனும் இதனையே நோக்கமாகக் கொண்டு ஒழுகல் வேண்டும். மனத்தை மாய்த்து மாலயடைக்கொன்று, உண்மையை வெளிப்படுத்தல் வேண்டும். கிருஷ்ண பக்ஷத்தில் ஒவ்வொருநாளும் முன்னிரவாகவுள்ள தினங்களில் சந்திரனும் மனிதனுடைய மனமும கலைகளை இழக்கின்றன. அவற்றினுடைய வன்மைகெடுகின்றது பதினன்காவது தினமாகிய சதுர்த்தசி தினத்தன்று இவைகளில் கலை ஓர் அளவு எஞ்சியிருக்கும். சாதகன் சிறந்த ஜாக்கிரதையோடு சிரத்தை எடுத்தால் அவ்வளவில் எஞ்சியுள்ள இருண்ட கலையையும் மனஒறுப்பாட்டினால் வளரச் செய்ய முடியும் ஆகவே பிற தெய்வ சிந்தனையின்றி உணவு உறக்கம் இன்றி, ஒன்றிய தியானத்தில் இருத்தல் வேண்டும் இதனால் பெருவெற்றி பெறுவது நிச்சயம் வருடத்துக்கு ஒருமுறை வரும மகாசிவராத்திரி தினத்தன்று பிரத்தியேக ஆர்வத்துடன் சிவபெருமானை வழிபட மனதிலுள்ள பாசம் நீங்க சீவன் சிவனாகும்,

சிவராத்திரியின் நோக்கம் இதுவே நித்திரை விழித்திருத்தல் மாத்திரம் சிவராத்திரி தினத்தின் முக்கிய நோக்கம் என்று எண்ணுவது மிகவும் மூடத்தனம். நித்திரையை ஓட்டுவதற்காக மக்கள் சீட்டாடுவதிலும தொடர்பாக சினிமாப்படம் பார்ப்பதிலும் கூத்தாடுவதிலும இதுபோன்ற களியாட்டங்களிலும சிவராத்திரி தினத்தைக் கழிக்கின்றார்கள்.

இது அநியாயச்செயலாகும். இவ்வாறு சிவராத்திரி விரதத்தைப் பிழையாக அநுட்டிப்பதால் சாதகன் கெட்ட செய்கைகளுக்கும் சோம்பேறித்தனத்துக்கும் வஞ்சகத்துக்கும அடிமையாகின்றான்.

இறைவன் இடப வாகனத்தில் அமர்ந்துள்ளார் என்பதன்பொருள்யாது? இடபம் என்பது தர்மத்தின் அறிகுறி நான்குகால்கள்உண்டு. அவை சத்தியம், தர்மம் – சாந்தி – பிரேமை என்பன இறைவனுக்குள்ள மூன்றுகண்களும் சென்ற காலத்தையும் குறிக்கின்றன இவ்வாறாக சிவராத்திரி தினத்தன்று இறைவனது நானாவித குணங்களை மனதில் தியானிக்க வேண்டும. ஈற்றில் எமயிடமுள்ள மாயைத் தோற்றமும் மறையும் சிவராத்திரி தினமாகிய இந்த இரவிலன்றி ஜீவனுள்ள

சைவ மகா சபை
குருநாக்கல்

குருநாக்கல் சைவ மகா சபையின் முப்பத்தொன்பதாவது வருடாந்த கூட்டம் நிகழும் கீலகவருடம் பங்குனி மாதம் ௨-ம் திகதி (15-3-69) சனிக்கிழமை மாலை 6 மணி அளவில் சபை மண்டபத்தில் நடை பெறும்.

* * *

நாவலர் நல்வாக்கு

சிவபெருமானிடத்தே அன்புடைமைக்கு அடையாளங்கள் எவை?

அவருடைய உண்மையை நினைக்குந் தோறும் கேட்குந்தோறுங் காணுந்தோறுந் தன் வசமழிதலும், மயிர்க்கால்தோறுந் திவலை உண்டாகப் புளகங்கொள்ளலும், ஆனந்த வருவி பொழிதலும், விம்மலும், நாத்தழுதழுத்தலும்; உரை தடுமாறலும் பிறவுமாம். (அன்பியல்)

—சைவவினாவிடை 2-ம் புத்தகம்

நாள் வரை சிவசிந்தனையாகவே இருத்தல் வேண்டும்.

[பம்பாய் நகரத்திலிருந்து வெளியாகும் பிரபல சஞ்சிகையில் ஸ்ரீ பகவான் எழுதியபடி]

சமயக் கொள்கைகளின்படி, சமயவாழ்வு வாழ்தலும் தேவார திருவாசகம் ஓதி உணர்ந்து கண்ணீர் மல்கி நிற்றலும், விரதம் அநுட்டித்தலும், புராணம் படித்தல் கேட்டலும் செயற்பாலனவாம். சமயப் பிரசங்கம் செய்வோர்கள் அருகிவருதலும்' திருமுறைகளின் பெருமையையும அருமந்த சித்தாந்த சாத்திரங்களை அறியாதிருத்தலும்' பிராமணர்கள் தங்கள வர்ண ஆச்சிரமத்துக்கமைய நடவாது ஒழுகுதலும, பிரமாணங்களையும் சைவக் குருக்கள்மார்களையும் பேணாது விடுதலும ஆகாவாம. திருநீற்றின் மகிமை தெரிந்தும் கோவிலுக்குச் சென்று அதனை அணியாது பேய் போல் அலைதலும, பெரியோர்கள் தம்பிள்ளைகளுக்கு அதன் பெருமையை விளக்காதொழிதலும நாவலர் அவர்கள் நமக்கெனத் தந்தருளிய நான்காம் பால பாடம், சைவ வினாவிடை பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராணவசனம், கந்தபுராண வசனம் முதலிய சைவ நூல்களை படியாது விடுதலும நாட்டில் நாத்திகத்தைப் பெருக்கி மக்களைக் கடவுள் கொள்கையில்லாதவர்களாக்கிவிடும்.

பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாவே சிவராத்திரி தினத்தில் எவ்வாறு எம் சிந்தனையைச் செலுத்துதல் வேண்டும் எனத் தெளிவாக்கியுள்ளார். அவர் திருவடியைப் பின்பற்றும் மெய்யடியார்கள் ஏன் இந்தவீண்வேலையில்......? கன்னித்தமிழும் சைவப் பயிரும் வளர்ந்த நல்லூரில்— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவதரித்த சித்தாந்த பூமியில் சிவசிந்தனை செய்கின்றார்கள். ஆட்டுக்கடாவின்தலை பெற்ற தக்கனை நினைவில் கொண்டு வாழ்வார்களாக.

இங்ஙனம்
ம சி. சிதம்பரப்பிள்ளை
கொழும்பு

தேவர்கள் நெஞ்சம்

ஒரு நேரப் பாடசாலை

இலங்கையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் பாடசாலைகள் எல்லாம் ஒரு நேரப் பாடசாலைகளாகவே இயங்குகின்றன. அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, ஐக்கிய அரபுக் குடியரசு போன்ற பல நாடுகளில் இந்தப் பயனுள்ள ஒரு நேரப் பாடசாலை முறையே அமுலில் இருக்கிறது. மேற்படி நாடுகளில் ஒரு நேரப்பாடசாலைகள் பெரும்பாலும் காலை 8-00 மணிக்குத் தொடங்கி மாலை 1.30 மணிக்கு முடியும். சிங்கள மக்கள் தங்கள் பிள்ளைகள் ஒரு நேரப்பாடசாலைக்குச் செல்வதால் அடையும் நன்மைகளை நன்கு உணர்ந்து தங்கள் பகுதியிலுள்ள எல்லாப் பாடசாலைகளையும் ஒரு நேரப் பாடசாலைகளாக மாற்றிவிட்டார்கள். தமிழ் மக்கள் பழமையை விரும்புகிறவர்கள் ஆகையால் தங்கள் பாடசாலைகளை ஒரு நேரப் பாடசாலைகளாக மாற்றத் தயங்குகிறார்கள். எங்கள் பாடசாலைகளை ஒரு நேரப்பாடசாலைகளாக மாற்றுவதன் அவசியத்தை விளக்குவதற்கு பின்வரும் காரணங்களை வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பாடசாலை 1-30 மணிக்கு முடிந்த பின் பிள்ளைகள் தங்கள் பெற்றோர் ஈடுபட்டிருக்கும் தொழிலில் அல்லது வேறு முயற்சிகளில் உதவி செய்ய முடியும். பாடசாலைகளில் பிற முயற்சிகளை வளர்ப்பதற்கும் இந்த நேரம் உகந்ததாய் அமையும். சென்னை மாகாணத்தில் பாடசாலைகள் 1.30 மணிக்கு முடிந்தபின் பிள்ளைகள் மாலையில் தத்தம் குலத்தொழிலைப் பயில வேண்டும் என்ற திட்டம், இப்பொழுது பிள்ளைகள் தத்தம் ஆற்றலுக்கேற்ப தொழிற்கல்வி பயிலும் ஒரு திட்டமாக மாறித்தமிழ்நாடு முழுவதும் அமுலில் இருப்பதை நாங்கள் மறந்துவிடக்கூடாது. வேலைவாய்ப்புக் குறைந்த இந்தக் காலத்தில் பிள்ளைகள் இவ்வாறு ஒரு தொழிலைக் கற்றுக்கொள்வது எதிர்காலத்தில் வேலையின்மை என்ற பீதியை போக்கிவிடும். பாடசாலை முடிந்த பின் பிள்ளைகள் தங்கள் ஆற்றலுக்கேற்பத் தட்டெழுத்து சுருக்கெழுத்து கட்டிடவியல், மோட்டார் இயந்திரவியல் போன்ற வேலைவாய்ப்பை அளிக்கும் பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம்.

மாலை நேரம் ஏட்டுக் கல்விக்கு உகந்தகாலம் அல்ல என்பது உளநூல்வல்லுநர்களே ஏற்றுக் கொண்ட ஓர் உண்மை. இந்த நேரத்திற்குத் தொழிற் கல்வியே சிறந்தது. தூரத்திலிருந்து வரும் பிள்ளைகள் மத்தியான உணவை தேநீர்க் கடை போன்ற விரும்பத்தகாத இடங்களில் அருந்திப் பல கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். ஒரு நேரப் பாடசாலைமுறை அமுலில் இருப்பின் மத்தியான உணவை மாணவர்கள் தங்கள் வீட்டிலேயே உண்ணலாம். பெற்றோர்கள் மத்தியான உணவுக்குச் செலவு செய்யும் பணத்தையும் மிச்சப்படுத்தலாம்.

தூரத்திலிருந்து வரும் மாணவர்கள் பள்ளிநேரத்தில் படமாளிகைக்குச் சென்று படம் பார்த்தல், பள்ளிக்குச் செல்லாமல் வீதிகளில் சுற்றுதல்போன்ற இழிசெயல்களுக்கு இந்த முறை இடமளிக்காது 1-30 மணிக்கு பாடசாலை முடிந்தவுடன் அவர்கள் வீடு திரும்பவேண்டியவர்கள் ஆவார்கள்.

5-30 மணி வரை கல்வி பயில்வதற்கு மாணவர்கள் ஒருநாள் முழுவதையும் பள்ளிக்கூடங்களில் கழிப்பது தற்காலச் சூழ்நிலையில நகைப்புக்குரியதே. பெற்றோரும் ஆசிரியரும் இந்த முறையை விரும்பினால் கல்வி இலாகா ஒரு நேரப் பள்ளி முறையை எங்கள் பகுதிகளில புகுத்துவதற்கு ஒருபோதும் தயங்கமாட்டார்கள் ஆகவே பெற்றோரும் பிள்ளைகளின் நலனை விரும்பும் அனைவரும் ஒரு நேரப்பாடசாலை முறையை வடக்கிலும் கிழக்கிலும் அமுலுக்கு கொண்டுவர ஆவன செய்ய வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கள் பணிவுள்ள
பெற்றோர்

ஓர் அன்பரின் மறைவு

சுவாலியூர் திரு க. சோமசுந்தரப்புலவர் அவர்களுடைய அரிய சகோதரனும் கொழும்புத்துறைத் தவமுனிவர் ஸ்ரீ யோகர் சுவாமிகளுடைய பிரியமுள்ள சீடனுமான திரு. அ. க. வேலுப்பிள்ளை அவர்கள் சென்ற 11-3-69 செவ்வாய்க்கிழமையன்று சிவபதமடைந்தனர் அவர் குருபக்தியிலும் அடியார் பக்தியிலும் தமிழ்இலக்கண இலக்கிய பயிற்சியிலும் சமயக் கல்வியிலும் சமய வாழ்விலும் கருத்துடையவர். அவருடைய மனைவியார் இற்றைக்கு ஆறுவருடங்களுக்குமுன்னர் சிவபதமடைந்தனர். இருவரும் கருத்தொருமித்து அடியார் சேவை விருந்தோம்பல் முதலிய அறங்களைப் பேணி இல்வாழ்க்கையை நடாத்தி வந்தனர் யோகர் சுவாமிகளுடைய பெருமையைஅவரைப்போல அறிந்தவரொருவரில்லையெனலாம் அவர் பேராதனையில் கடமையாற்றிய காலத்தில் யோகர் சுவாமிகள் அங்குசெய்த அற்புதங்களை அவர்மூலம்கேட்டால் மயிர்சிலிர்க்கும். உள்ளத் துறவுடைய ஒப்பற்ற மெஞ்ஞானி அவரென்பதை அவருடைய கூற்றுக்கள் விளக்கின. சிவதொண்டனிலே அவர் யோகர் சுவாமிகளைப்பற்றி எழுதிய கட்டுரைகள் நாம் கூறுவதை நிரூபிக்கும். அவருடைய ஆன்மாபிரியும்பொழுது அவருடைய மூன்று பெண்பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் மற்றைய உறவினரும் அவருக்கு அருகில் நின்றனர். அப்பொழுது அவர் சென்றமாதம் வெளிவந்த சிவதொண்டன் சஞ்சிகையில் சேர்க்கப்பட்டிருந்த யோகர் சுவாமிகளுடைய திருவுருவப்படத்தை தமது மார்பில் அணைத்துக்கொண்டு சுவாமிகளுடைய திருநாமத்தைக் கூறிக்கொண்டிருக்க அவருடைய ஆன்மா பிரிந்தது. ஆன்மா பிரியமுன் சிதம்பரதலத்தில் மோக்ஷ விளக்கேற்றுவதற்கு தங்கள் தீக்ஷிதருக்கு தந்தி பேசும்படியும் பிள்ளைகளைக் கேட்டுக் கொண்டார் இப்பெரியார் பேராதனையில் கடமையாற்றிய காலத்தில் தமது மனைவியாருடன் கதிர்காமத்துக்குப் பாதயாத்திரையாகச் சென்ற வரலாற்றையும் நமக்குக் கூறியிருக்கின்றனர். அவர்கள் யாத்திரையில் பெற்ற அநுபவங்கள் முருகப் பெருமான்மீது அவர்கள் கொண்டுள்ள ஒப்பற்ற பக்தியை விளக்கும்.

எங்கள் இந்துசாதனக் காரியாலயத்தில் சென்ற ஏழெட்டு வருடங்கள் கணக்குகள் பதியும் தொண்டினையும் புரிந்தனர், இந்துசாதனம் தமிழ் ஆங்கிலப் பிரசுரங்களுக்கு விஷயதானங்களும் செய்தனர். அவருடைய பிரிவு சைவவுலகுக்குப் பெரிய இழப்பாகும். அவரைப் பிரிந்து வருந்துகின்ற அவருடைய பிள்ளைகளுக்கும் மற்றைய உறவினருக்கும் எமது அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். அவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

கலைப் பகுதிச் சங்கம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினது இவ் வருட உயர்தர கலைப்பகுதி மாணவர் தமிழ்ச் சங்க உத்தியோகத்தர்கள்:- தலைவர் வி. மாணிக்கம், செயலாளர் ஜனப். ஏ. சி. மஹ்றூப், பொருளாளர். க. செல்வராசா.

ஒரு விண்ணப்பம்

"இந்துசாதனம்" தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளினது சந்தாதாரர்களைத் தங்கள் சந்தாப்பணத்தை நிலுவையின்றி செலுத்தும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

31-3-69 க்குமுன் அனுப்பி ஆதரவு தருவார்களாக.

— மனேஜர்.

திருவள்ளுவர் தினம்

வண்ணை, தட்டாதெரு அரசடி இந்து இளைஞர் மன்றத்தினரால 7-3-69 வெள்ளிக்கிழமை அன்று மேற்படி ஆலய முன்றலில், "திருவள்ளுவர் விழா" சிறப்பாக நடைபெற்றது. சிவஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா அவர்களால், "திருவள்ளுவநாயனார்" என்னும் சொற்பொழிவும், பஜனை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பகிர்ந்திட்டு, நீயும் உண்ணு.

THAMBY & Co.
ACCEPT
I. Fixed Deposits
at the following Rates of Interest
1 Year 8 % per annum
2 Years 9 % ,, ,,
3 Years 10 % ,, ,,
FOR CHARITABLE INSTITUTIONS
12 % per annum
INTEREST IS PAYABLE ANNUALLY
N. B. These Deposits could be Withdrawn
At Any Time by Giving the Firm
30 DAYS WRITTEN NOTICE
II. Call Deposits
THESE DEPOSITS COULD BE WITHDRAWN
by giving the FIRM
30 Days Notice — Interest @ 8 % per annum
or 7 ,, ,, — ,, 7 % ,, ,,
or 3 ,, ,, — ,, 6 % ,, ,,
III. Savings Deposits
at the following RATES OF INTEREST
8 % per annum on MONTHLY MINIMUM BALANCES
10 % { ,, ,, ,, ,, ,, FOR CHARITABLE INSTITUTIONS
Head Office: THIRUNELVELY, JAFFNA
Branch ,, : VANNARPONNAI, JAFFNA

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

காங்கேசன்துறை றோட்டு யாழ்ப்பாணம் பழனி தப்புவர் பெண் நாகம்மாவும் — வழக்காளிகள்

வழக்கு இல. M B/4866 எதிராக

கைலு வைத்தி கதிரனும் பெண் குளந்தையும் — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 4869-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1969-ம் ஆ. பங்குனி மீ 31 ம் திகதி (31-3 69) முற்பகல் 10-30 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 600/— இன்னும் ரூபாய் 300 க்கு 4-6-62 தொடக்கம் 2-11-67 வரைக்கும் 12 வித வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வித வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 338-35 சதமும்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பிரிவு நைனாதீவு கோயிற்பற்று நைனாதீவு இறை "வேலாத்தை வளவு" பரகில இலா 7 - 4 குளி கிணறுகளுடன் இதற்கெல்லை கிழக்கு சவுரி சந்தனுக்கும் பங்காளருக்கும் கறுத்தான் வல்லிக்குமுரியவாதனங்கள். வடக்கு தம்பிமுத்து பாலசிங்கத்துக்கும் பங்காளருக்குமுரிய வாதனம். மேற்கு இராமநாதன் பெண் சின்னச்சிக்கும் மற்வர்களுக்குமுரிய வாதனம் தெற்கு கறுத்தான் சின்னக்குட்டிக்குமுரிய வாதனம், பதிவு இலக்கம்: C. 241/136

செ. விசாகரத்தினம்

133, பருத்தித்துறை றோட்டு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
நல்லூர், யாழ்ப்பாணம், 1-3-69. M 401- 14-3-69

யாழ்ப்பாணம்
ஐக்கிய இலாப நிதி
கொம்பனி லிட்.
(ஸ்தாபிதம் 1918)
10,000-00 பங்குகள் ரூபா 5 விகிதமான 50,000-00
மாதாந்த சேமம் கட்டும் முறை.
மாசமொன்றுக்கு ரூபா 10-00 விகிதமாக 80 மாச காலத்துக்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் கட்டுப் பணமும் வட்டியுமாக ரூபா 1000-00 திருப்பிக் கொடுக்கப்படும். ரூபா 100-00 விகிதமாகக் கட்டினால் ரூபா 10,000 00 கொடுக்கப்படும்.
சேமிப்பு பற்றுவரவு எச்சநிதி.
ரூபா 1500-00 க்கு குறையாமல் இருக்குமாயின் 1 வித வட்டியுடன் சேமிப்புப் பற்று வரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட சேமம்.
சேமப்பணம் முறையே, 12, 24, 36, என்னும் மாச காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டி முறையே 7, 8, 9, விதமாகக் கொடுக்கப்படும்.
கடன்.
நகைகள் ஈடு வைத்துக் கொண்டும், சேமப்பணத்தைப் பிணையாக வைத்துக் கொண்டும் கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம். — மனேஜர்

COMMISSION SALE
கோட்டுக் கொம்மிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ இல. 9743

1. முருகேசு நடேசு அல்லது மு. நடராசா
2. வெண்பாக்கியம் கரவெட்டி வடக்கு — வழக்காளிகள்

எதிராக

1. வேதன் செல்லையா கரவெட்டி வடக்கு
2. வேதன் வயிரமுத்து தற்காலிகமாய் இருப்பது உடுவில்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக்கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் 1969 ஆண்டு பங்குனி மாதம் 31ம் திகதி (31. 3. 69) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த ஆதனமிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிகோவிற்பற்று கரவெட்டி குஞ்சலிகுறிச்சி 'கொல்லன் குடியிருப்பு'' நில. பர. 6, குழி 13½ எல்லை கிழக்கு வல்லியப்பர் கைம்பெண் தங்கத்திற்கும் மறுபேருந்தும் உடைய ஆதனம். வடக்கு தம்பர் 1-ம் எதிரிக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம் மேற்கு கார்த்திகேசுவின் கருமைக்காரருக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். தெற்கு மார்க்கண்டு வெண்பாக்கியத்துக்கும் மறுவுக்கும் உடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டதற்றில் சொரியலுக்கும் உடைய ஆதனம். இதற்குரிய கிணற்றும் பங்கும் வழிவாய்க்காலும் 1/8 பங்கும், இதற்குரிய கிணற்றும் பங்கும் வழிவாய்க்கால் இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 7500/-

2. ஷெ கரவெட்டி வதிரிக் குறிச்சி ''தச்சன் சீமா'' நில. பர. 6¾ ஷெ நில. பர 1½ இவைகளில் நடுப்பெற 3/4 பரப்பு. இதற்கு எல்லை கிழக்கு கார்த்திகேசு மார்க்கண்டுவுக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். வடக்கு தம்பு சுந்தரத்திற்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். மேற்கு வேலப்பர் கதிர்காமருக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம் தெற்கு தினகரன்பிள்ளை மறுபேருக்கும் உடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவற்றில் சொரியலாய் ½ வாசியும், வடமேற்கு புறமாக இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்கால் உரித்தும். இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா. 3, 750/-

3. ஷெ ''கொல்லன் குடியிருப்பு'' நில. பர. 5½ இதற்கு எல்லை கிழக்கு தம்பு சுந்தரத்திற்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். வடக்கு முடிக்குரிய ஆதனம். மேற்கு வல்லியப்பர் வீரகத்திக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். தெற்கு வேலப்பர் கதிர்காமருக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் 3/64 பங்கும் இதற்கு தென் கிழக்குப் புறமாக இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலைமதிப்பு ரூபா 2, 460/-

தீர்வைத் தொகை	—	—	1462-00
ரூபா 750க்கு 10 வீத வட்டி 15-8-67 — 7-2-68 வரை		—	38-00
ரூபா 1500க்கு 5 வட்டி 18-2-68—24-12-68	—	—	62-00
			1562-00
கட்டிய காசு		—	500-00
			1062-00
கோட்டுச் செலவு	227-50		
கட்டிய காசு	150-00		
	77 50		77-50
மொத்தம்		—	1139-50

''சந்நிதி வேல்''
பருத்தித்துறை.

கா. முத்துகுமாருஐயர்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
Commissioner, Valuer & Licensed Auctionee.

27-2-69 எம் 393. 7-3-69

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

மலோ (Maloey) சிவிபகால காப்புறுதி கூட்டுஸ்தாபனம்
ஐமமா மொஸ்க லேன், யாழ்ப்பாணம்.
இல. M. B. 5956 எதிராக —வழக்காளி
யாழ்ப்பாணம் பெரியகடை
முத்துக்குமாரு குழந்தைவேலு கதிரவேலு
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 5956-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி என்னால் 1969-ம் ஆண்டு சித்திரை மாதம் 26-ம் திகதி (26-4-69) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 6166-72ம் இதில் ரூபா 5000/-க்கு 13-8-63 தொடக்கம் 1-12-64 வரைக்கும் 100க்கு 10 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 340-90½

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை புதிரியடி (Puthiriyaoy) இரண்டு (2) குழியும் அக்காணிக்குள் அடங்கியுள்ள கட்டிடத்தின் பகுதியும் அதைச் சேர்ந்தவைகளும் பதிவு எண். D 250-225 இறை மதிப்பு இலக்கம் 38 மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம் எல்லை கிழக்கும் வடக்கும் இதில் சொல்லப்பட்ட எதிரியின் ஆதனம். மேற்கு பரமசாமிச் செட்டியார் கனகசபைச் செட்டியாரின் ஆதனம். தெற்கு ரோட்டு D. 230/223ல் பதியப்பட்டிருக்கிறது.

24-ம் நம்பர்,
1-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 21-3-69.

க. சுப்பிரமணியம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
(எம் 403 21-3-69)

பிழை திருத்தம்

சென்ற 7-3-69 ல் வெளிவந்த இந்துசாதன இதழில் வழ இல. M B 9052 கோட்டு விற்பனவு விளம்பரத்தில் இரண்டாவது எதிராளி பசீனாவும் என்றிருப்பதை பசீருவும் என்றும், ஆதன விபரப் பகுதியில் எல்லை கிழக்கு இதறு மக்கர் வீதி என்றிருப்பதை ஐதுறூஸ் மக்கம்வீதி என்றும், மேற்கு எல்லை மீருசாகிப் கைம்பெண் பெண்ணுச்சிக்கும் என்பதில் பெண்ணுச்சி என்றிருப்பதை பொன்னுச்சி எனவும் திருத்திக் கொள்க.

X X X

சென்ற 7-3-69 இந்துசாதனம் இதழில் M B 8795-ஆம் இலக்க கோட்டுவிற்பனவுவிளம்பரத்தில் காணி விபரம் என்ற பகுதியில் முதலாம்காணியில் மேற்கு எல்லை முருகேசு கைம்பெண் தெய்வானைப்பிள்ளையின் ஆதனம் என்பதையும் சேர்த்து வாசிக்குக.

கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M, B 8295

யாழ்ப்பாணம் அரியாலை
பொன்னையா சபாபதி ஐயர்
—வழக்காளி.

எதிராக

கொடிகாமம் கச்சாய்
கந்தர் வேலுப்பிள்ளையும்
ஷெ மனைவி அமுத்தாயும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M,B. 8295-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகளை 1969-ஆம் ஆண்டு சித்திரை மீ 11-ம் (11-4 69) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 2912/- இதில் ரூ. 1600/-க்கும் 11-7-66 தொடக்கம் 20-1-67வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 278-95 செலவழித்த செலவு ரூபா 177-10 வெளியாத்துச் செலவு ரூபா 52 எதிர்வரும் செலவு ரூபா 49-85 வழக்காளி வசம் ரூபா 1000/- கொடுபட்ட வகையில் கழிபட வேண்டியது.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி கச்சாய்க் கோவிற்பற்று கச்சாய் இறை. இலந்தை தடிப்பு பா. நி 4. 7/8 பயிர் வகைகளும் வீடும் எல்லை கிழக்கு கந்தர் பிள்ளையினரின் ஆதனம். வடக்கு வேலுப்பிள்ளை சின்னத்தம்பிக்கும் மக்களுக்குமுரிய ஆதனம் மேற்கு கந்தர வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை இதடங்கலும் F 231-91-ல பதியப்பட்டிருக்கிறது.

ஷெ கச்சாய்இறை ''அனுமான் தரவை'' பா, நீ. 8½ ஆளுகை ஆட்சிப்படி பா. நீ. 11 எல்லை கிழக்கு வேலுகந்தரின் ஆதனம் வடக்கு பிள்ளையினர் சுவிகாய பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு ஒழுங்கை தெற்கு ரோட் இதடங்கலிற்சொரியலாய் ½ பங்கும் அதைச்சேர்ந்தவைகளும் F 214-184 பதியப்பட்டிருக்கிறது

க. சுப்பிரமணியம்
Commissioner of Sales

24-ஆம் நம்பர்
1-ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 5-2-69
எம் 402 15-3-

கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர் நன்னித்தம்பி நிலையம்பலம் கோப்பாய்
அம்பலவாணர் கந்தையா பொன்னம்பலம்
வட்டுக்கோட்டை மேற்கு, — வழக்காளியின் பிரதிநிதி

இல: M, B. 6137 எதிராக

சின்னட்டி சின்னத்தம்பியும்
மனைவி சின்னமமாவும், கோப்பாய் தெற்கு
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 6137-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுள் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1969-ம் ஆண்டு சித்திரை மீ 20 உ (20-4-69) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 1407-ம் 23-10-63 தொடக்கம் 7-4-67 வரைக்கும் ரூபாய் 1100/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 329-60 தீர்வையின் பின் கொடுபட்ட ரூபாய் 100/- அதன்பின் கொடுபட்ட ரூபாய் 180/- மொத்தமாய் ரூபாய் 280/- கழிவாக

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்கு இறை ''பார்ப்பான் தோட்டமும் கருமாதன் வளவும் பார்பான் தோட்டம்'' நிலம் பரப்பு 2ம், எல்லை கிழக்கு- நீலாணிபாலுவின் மனைவி பொன்னியினுடைய ஆதனம், வடக்கு - வயித்தியநாதர் மனைவி சிதம்பரத்தினுடையதும் கணபதி கந்தனுடையதும் ஆதனங்கள் மேற்கு - கணபதி கந்தனுடைய ஆதனம். தெற்கு - ஒழுங்கை இதற்குள் அடங்கிய கட்டிடமும் இந்தக் காணிக்கும் இதன் கிழக்குக் காணிக்கும் விடப்பட்ட 9 அடி அகலம் கொண்ட ஒழுங்கை நிலமும் இதன் கிழக்குப் பக்கத்தின் காணியின் வடக்கு எல்லையில் இருக்கும் கிணற்றில் அரைக்கும் கிழக்குப் பக்கத்துக் காணியின் வடக்கு அருகால் வழிவாய்க்கால் பாவிப்பு உருமையும் அதனுடைய கிழக்குக் காணிக்கு இவ் உரிமைகளும் ஒன்றுக.

107, பெரியதெரு.
யாழ்ப்பாணம்,
14-2-69

எ.பி.பி. எதிர்மன்னசிங்கம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
எம். 396 14—3—69

கோட்டு விற்பனவு விளம்பரம

1 வேலாயுதபிள்ளை சுந்தரமதநாதபிள்ளை
2. மனைவி சரஸ்வதி அம்மாள்
59. மின்சார வீதி, யாழ்ப்பாணம்.

வழக்கு இல. M. B. 7608 எதிராக —வழக்காளிகள்

1. சரவணமுத்து முத்துலிங்கம்
2. மனைவி பேரம்மா, காம்பன், ஊர்காவற்றுறை

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 7608 ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் காணிகளை 1969-ம் ஆண்டு சித்திரை மீ 15-ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

தீர்வைத் தொகை: ரூபா 4333/-ம் 12-8-65 தொடக்கம் 19-1-67 வரை ரூபா 4000/-க்கு 5 வீதவட்டியும் அதன்பின் பணம் முற்றாக இறுக்கும்வரையில் முழு கூட்டுத் தொகைக்கு 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 293/07

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் ஊர்காவற்றுறை கோவிற்பற்று காம்பன் இறை தீவுப்பகுதி 146/64ல் பதிவு செய்யப்பட்ட 'பறங்கித்தோட்டம்'' என்னும் காணி மதிப்பிலக்கம் 16 ஊர்காவற்றுறை பட்டணசபை 3-ம் வட்டாரம், பா. லச்சம் 3ல வடக்குப்புறமாக பா. நில. லாச்சம் 2 இந்தப் பரப்பு நில. லாச்சம் 2ம், அதைச் சேர்ந்தவைகளும் அக்காணியில் கட்ட இருக்கும் வீடும், இதற்கு எல்லை கிழக்கு - பண்டாரி கிருஷ்ணபிள்ளையின் ஆதனமும், கை ஒழுங்கையும், வடக்கு - கை ஒழுங்கை, மேற்கு றோட்டு, தெற்கு - வேலுப்பிள்ளையின் மனைவி அன்னபூரணத்தினதும் மக்களினதும் ஆதனமும் இக் காணி நில அளவைக்காரன் வாசன்ஸ் தம்புவால் 14-6-53ல் தயாரிக்கப்பட்ட 1817ஆம் இலக்கங்கொண்ட படத்தில் காட்டப்பட்டிருக்கிறது. மூற பதிவு C. 314/120

'முருகன் இல்லம்''
இணுவில், 2-3-69.

க, செல்வத்துரை, J. P.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
எம் 400 14-3-69

''ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதார்க்கு முண்டாங்கொ
லன்றெய்தி வாழ்வதோ ராறு'' — குறள்

ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடிய ரெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 14—3—1969 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்